DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I COURT, ERODE

C.C. No. 112/2015

Defence witness D.W.1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சம்பூர்ணம் | கணவர் பெயர் | முத்துச்சாமி |
| கிராமம் | சிங்கபேட்டை | ஊர் | ஈரோடு |
| தொழில் | | வயது | |

2, 4 எதிரிகள் ஆஜர். **(1, 3 எதிரிகள் ஆஜர் இல்லை. 1, 3 எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச. பிரிவு – 317–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது).**

Solemnly affirmed in accordance with the provisions of ACT X of 1873 of the day of 08.06.2026

**முதல் விசாரணை**

1) நான் தற்போது ஈரோடு, சிங்கப்பேட்டையில் குடியிருந்து வருகிறேன். சிங்கம்பேட்டை அங்கன்வாடி பள்ளியில் சமையல் வேலை செய்து வருகிறேன்.

2) கடந்த 16.07.2013 ம் தேதி மாலை 06.00 மணியளவில் நான் எனது வீட்டில் இருந்த போது எனது மகன் ராம்கி பண மோசடி செய்துவிட்டதாக எனது மகனை மூன்று போலீசார் வீட்டிற்கு அழைத்து வந்து இன்னும் மூன்று நபர்களை பிடித்து வைத்திருப்பதாகவும் 2 லட்சம் பணம் கொடுத்தால் உங்கள் மகனை விட்டுவிடுவதாக கூறினார்கள். நான் என்னால் பணம் தர முடியாது என்று கூறினேன். அதற்கு அந்த போலீசார் மீதி இரண்டு பேருடைய பெற்றோர் பணம் கொடுத்துவிட்டதாக போலீசார் கூறினார்கள். நான் சேமித்து வைத்திருந்த ரூபாய் ஒரு லட்சத்து இருபத்து நாலாயிரம் பணத்தை ஒரு பானையில் வைத்திருந்தேன். நான் அந்த பணத்தை எடுத்து வந்து போலீசாரிடம் கொடுத்தேன். ஆனாலும் போலீசார் எனது மகனை அழைத்துச் சென்று விட்டார்கள். மறுநாள் காலை மதியம் 01.00 மணிக்கு கருங்கல்பாளையம் காவல் நிலையத்திற்கு சென்று அங்கு வெளியில் மப்டியில் இருந்த நான்கு, ஐந்து பேரிடம் சிங்கம்பேட்டையிலிருந்து பசங்க வந்தார்களா என்று கேட்டேன். அதற்கு அவர்கள் யாரும் வரவில்லை. எங்களுக்கு தெரியாது என்று கூறினார்கள். நான் அங்கன்வாடியில் வேலை இருந்ததால் திரும்ப சென்றுவிட்டேன். அதன் பிறகு எனது மகனை போலீசார் கைது செய்து ஜெயிலில் அடைத்துவிட்டார்கள் என கேள்விபட்டேன். நான் எனது பிள்ளைகளுடன் எனது மாமியார் வீட்டிற்கு சென்று விட்டேன். ஆறுமாதங்கள் கழித்து தான் எனது மகனை பார்த்தேன். எனது மகன் எந்த தவறும் செய்யவில்லை.

VANJI NATHAN R

Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.06.08 17:46:28 +0530

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

2013 ம் வருடம் என்ன வேலை செய்து கொண்டிருந்தேன் என்றால் காட்டூரில் உள்ள எலிமென்ட்ரி பள்ளியில் சமையல் வேலை செய்து கொண்டிருந்தேன். அப்போது எனக்கு மாதத்திற்கு லீவ் போடாமல் தொடர்ந்து வேலை செய்தால் 500 ரூபாய் சம்பளம் கொடுப்பார்கள். லீவ் போட்டால் 200 ரூபாய் சம்பளம் கொடுப்பார்கள். எனக்கு ஐந்து பிள்ளைகள். எனக்கு இரண்டு மகன்கள் மற்றும் மூன்று மகள்கள். எனது கணவர் மூட்டை தூக்கும் வேலை செய்து வந்தார். 2013 ம் வருடம் எனது மகன் ராம்கி என்ன வேலை செய்து கொண்டிருந்தார் என்றால் கூலி வேலைக்கும், காட்டு வேலைக்கும் சென்று கொண்டிருந்தான். 2013 ம் வருடத்தில் நாங்கள் சொந்த வீட்டில் தான் வசித்து வந்தோம். வீட்டில் அந்த சமயத்தில் கால் மிதி மேட் செய்து வந்தேன். அந்த சமயத்தில் எங்கள் குடும்ப வருமானம் ரூ.5000/– இருக்கும். சம்பவ சமயத்தில் இரண்டு மாடுகள் வைத்திருந்தோம். போலீசார் வந்து பணம் கேட்ட போது வீட்டில் நான் மட்டும் தான் இருந்தேன். போலீசார் பணம் கேட்ட விசயத்தை எனது கணவரிடம் கூறினேனா என்றால் அவர் வேலைக்கு சென்று விட்டதால் அப்போது கூறவில்லை. மறுநாள் தான் அவர் வந்தார். அப்போது அவரிடம் கூறினேன். எதற்கு கேட்காமல் பணத்தை கொடுத்தாய் என்று என்னை திட்டினார். எனது வீட்டிற்கு வந்து மிரட்டியதாக சொன்ன மூன்று பேரின் பெயர்களை தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. போலீசார் பணம் வாங்கியது சம்மந்தமாக காவல் கண்காணிப்பாளர் அவர்களிடமோ அல்லது மாவட்ட ஆட்சியரிடமோ புகார் அளித்தேனா என்றால் இல்லை. நான் பணம் கொடுத்ததற்கு யாராவது சாட்சியாக இருந்தார்களா என்றால் இல்லை. 2013 ம் வருடம் பணம் கொடுத்துவிட்டு இத்தனை வருடங்களாக அதை பற்றி புகார் அளிக்காமல் ஏன் தற்போது வந்துள்ளேன் என்றால் இப்போது தான் விவரம் தெரிந்தது. நாங்கள் குடியிருந்த வீடு தொகுப்பு வீடு ஆகும். நான் பெரிய தொகையாக ரூபாய் ஒரு லட்சத்து இருபத்து நாலாயிரத்தை சம்பவம் சமயத்தில் வீட்டில் வைத்திருக்க வாய்ப்பு இல்லை என்றாலும், நான் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றாலும் சரியல்ல. எனது மகனை அதன் பிறகு ஜாமீனில் எடுத்தேனா என்றால் எனது கணவர் ஜாமீனில் எடுத்தார். அந்த சமயத்தில் எனது கணவரும் நீதிமன்றத்தில் போலீசார் என்னை மிரட்டி பணம் வாங்கிய விவரத்தை கூறினாரா என்றால் கூறவில்லை. ரூபாய் ஒரு லட்சத்து இருபத்து நாலாயிரம் தொகை எவ்வாறு சம்பாதித்தேன் என்பதற்கு ஆவணங்கள் எதையும் நான் நீதிமன்றத்தில் தாக்கக் செய்யவில்லை என்றால் சரிதான். நீதிமன்றத்தில் பணம் இருப்பதை தெரிந்து கொண்டு தற்போது அதை எப்படியாக பெற வேண்டும் என்ற எண்ணத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 2013 ம் வருடம் எங்கள் குடும்ப வருமானமே ரூ.5000/– என்றாலும் அந்த தொகையானது ஆறு நபர்களுக்கு உண்டான செலவிற்கே போதாது என்றாலும் அதில் சேமிற்பிற்கு என்று எந்த தொகையும் மீதி இருக்காது என்றாலும் சரியல்ல. அவ்வாறு நான் சேமித்து வைத்திருந்தாலும் எனது கணவருக்கு குடிப்பழக்கம் உண்டு என்பதால் வங்கிலோ அல்லது அஞ்சலக சேமிப்பு கணக்கிலோ தான் வைத்திருப்பேன் என்றால் சரியல்ல. பணம் வாங்கி சென்றவர்களின் அங்க அடையாளம் தெரியுமா என்றால் தெரியாது. நான் கஷ்டப்பட்டு சேமித்து வைத்திருந்த பணத்தை கேட்டவுடன் கொடுத்திருந்தால் அவர்களின் அடையாளம் எந்த காலத்திலும் மறந்திருக்காது என்றாலும் நான் சொன்னது போல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றாலும்

VANJI NATHAN R
Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.06.08 17:46:55 +0530

சரியல்ல. உண்மையில் நான் பணத்தை கொடுத்திருந்தால் நான் நடவடிக்கை எடுக்காத போதும் எனது கணவராவது நடவடிக்கை எடுத்திருப்பார் என்றால் சரியல்ல. மேற்படி ஒரு லட்சத்து இருபத்து நாலாயிரம் தொகை என்ன என்ன நோட்டுகளாக இருந்தது என்றால் ஐநூறு ரூபாய், நூறு ரூபாய் நோட்டுகளாக இருந்தது. தற்போது என்னிடம் காட்டப்படும் ஊதா நிற நூறு ரூபாய் நோட்டு மற்றும் பச்சை நிற ஐநூறு ரூபாய் நோட்டு போன்று தான் நான் சேமித்து வைத்திருந்த பணம் இருக்கும் என்றால் ஆமாம். ATM கார்டு மோசடி செய்து ரூபாய் ஒரு லட்சத்து இருபத்து நாலாயிரத்தை வைத்திருப்பதாக எனது மகன் ஒப்புதல் வாக்குமூலம் அளித்து அதன் அடிப்படையில் செங்கோட்டையா கல்யாண மண்டபம் அருகில் எனது மகன் ஆஜர் செய்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது. என்னிடம் ரூபாய் ஒரு லட்சத்து இருபத்து நாலாயிரம் பணம் அந்த சமயத்தில் இல்லை என்றாலும், போலீசாரிடம் நான் எந்த பணத்தையும் கொடுக்கவில்லை என்றாலும், எனது மகன் சொல்லிக் கொடுத்ததன் பேரில் பணத்தை வாங்க வேண்டி நீதிமன்றத்திற்கு வந்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**நீதிமன்ற கேள்வி**

கேள்வி.1 கடந்த 16.07.2013 ம் தேதி மாலை 06.00 மணிக்கு எனது மகனை எனது வீட்டிற்கு அழைத்து வந்த மூன்று போலீசாரை பார்த்தால் தற்போது என்னால் அடையாளம் காட்ட முடியுமா ?

பதில் : நியாபகம் இருந்தால் காட்டுவேன்.

கேள்வி .2 எனது மகன் அந்த மூன்று பேருடன் இருந்ததால் எனது மகனால் அந்த மூன்று போலீசாரை அடையாளம் காட்ட முடியுமா?

பதில் : எனக்கு தெரியவில்லை.

கேள்வி.3 பணம் கொடுத்தால் எனது மகனை விட்டுவிடுவதாக போலீசார் கூறிதன் பேரில் நான் ஒரு லட்சத்து இருபத்து நாலாயிரம் பணம் கொடுத்த பிறகும் எனது மகனை போலீசார் கைது செய்து வழக்கு போட்டுள்ள போது ஏன் அது பற்றி புகார் அளிக்கவில்லை ?

பதில் : என்னால் வெளியே அடிக்கடி செல்ல முடியாததால் நான் புகார் அளிக்கவில்லை.

கேள்வி.4 அந்த மூன்று போலீசார்களை நீதிமன்றத்திற்கு அழைத்து வந்தால் நீங்கள் அடையாளம் காட்ட தயாராக இருக்குறீர்களா ?

பதில் : எனக்கு அடையாளம் தெரியாது.

VANJI NATHAN R

Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.06.08 17:47:01 +0530

**மறு விசாரணை**

**இல்லை.**

Taken Down Before Me and Typed By the Typist in Open Court Read Over/ Interpreted to the witness/deponent and Admitted by the witness/deponent to be correct.

VANJI NATHAN R

Digitally signed by VANJI NATHAN R
Date: 2026.06.08 17:47:05 +0530

Judicial Magistrate No.I,
Erode.